**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

OS. 264/2024

பெயர் : ராமசெல்வம் (PW1) (Cross )

த/க/பெ. :

தேதி : 21.01.2026

ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எங்கள் கிரய ஆவண படி வருவாய் ஆவணங்களில் சொத்தின் அளவீடு திருத்தம் செய்து தரக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வருவாய் ஆவணங்களின் விஸ்தீரணம் தவறாக உள்ளது குறித்து கோட்டாட்சியரிடம் மனு கொடுத்தோமா என்றால் கொடுத்துள்ளோம் அந்த மனு நகலை வழக்கில் தாக்கல் செய்துள்ளோம். நான் அவ்வாறு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யயவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் கோட்டாட்சியரிடம் மனு கொடுத்து அதன் அடிப்படையில் வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் கொடுக்கும் வருவாய் ஆவணங்களில் விஸ்தீரணம் தவறாக இருந்தால் மட்டுமே நீதிமன்றம் அனுக இயலும் என்றால் சரியல்ல. கோட்டாட்சியரிடம் மனுவே கொடுக்கவில்லை என்றால் மக்கள் குறைதீர் கூட்டத்தில் ஆட்சியர் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளோம். மனுவுடன் கிரய பத்திரம், FMP, VAO சான்று இணைத்துள்ளோம். நான் மனுவுடன் ஆவணங்களை கொடுக்காமல் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வருவாய் ஆவணங்கள் தவறாக உள்ளது என்று மாவட்ட ஆட்சியரை தவிர வேறு எங்கும் மனு கொடுக்கவில்லை. எங்கள் கிரய பத்திரத்தில் உள்ள அளவுகள் சரியாக உள்ளது குறித்து வேறு ஆவணம் எதுவும் எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கில் எந்த அவசர நிமித்தமும் இல்லை என்றாலும் பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எங்களுக்குள் பாக பிரிவினை செய்து கொள்ள வேண்டி உள்ளதால் அவசர நிமித்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளோம். வழக்கு தாக்கல் செய்தது என் தந்தை. அவருக்கு உடல் நிலை சரியில்லாததால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் அதற்கு அதிகார ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு அதிகாரம் இல்லாமல் சாட்சியம் அளித்தால் ஏற்புடையது

அல்ல என்றால்சரியல்ல. பொய்யாக சங்கதிகளை கொண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதால் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு நிலை நிற்க தக்கது அல்ல என்றால் சரியல்ல.

MUMTAJ Digitally signed by MUMTAJ Date: 2026.01.21 16:42:17 +0530